[2013 மார்ச் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

புறவழிச் சாலை

*__4849__—திருமதி ஆர். சாந்தி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, தண்ணீர்பந்தல்காடு முதல் இராசிபுரம் தொகுதி, பொன்குறிச்சி வரை புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை பேரூராட்சி, தண்ணீர்பந்தல்காடு முதல் இராசிபுரம் தொகுதி, பொன்குறிச்சி வரை புறவழிச் சாலை அமைக்க இரண்டு கட்டமாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.*

முற்பகல் 10—30

திருமதி ஆர். சாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பணி நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். உண்மைதான். ஆனால், இராசிபுரம் புறவழிச் சாலைக்கு கடந்த 2001—2006—ல் தண்ணீர்பந்தல்காட்டுப் பகுதியிலிருந்து ஒடுவங்குறிச்சி வழியாக பொன்குறிச்சியில்*

2013 மார்ச் 25]

சேருமாறு திட்டம் போடப்பட்டது. தற்போதைய மாண்புமிகு சபாநாயகர் அவர்கள், துணை சபாநாயகராக இருந்தபோது 22–6–2011–ல் அதனை தொப்பப்பட்டி, ஜேடர்பாளையம் வழியாக மாற்றியமைக்கக் கோரி நெடுஞ்சாலைத் துறையினரிடம் கடிதம் கொடுத்துள்ளார். இந்தச் செயல்பாட்டினால் 4 கி.மீ. அதிகத் தொலைவிலும், சுற்றி வளைத்தும், பொதுமக்கள் விரும்பாத வகையில் அமைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதுசம்பந்தமாக பொதுமக்கள் போராட்டங்களை அறிவித்து, காவல் நிலையம் மற்றும் அனைத்து அதிகாரிகளுக்கும், எனக்கும் புகார் மனு கொடுத்துள்ளனர். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிக் காலத்தில், 2001–2006–ல் போடப்பட்ட அந்தத் திட்டத்தையே மீண்டும் செயல்படுத்திக் கொடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசிபுரம் புறவழிச் சாலையானது மல்லியக்கரை, இராசிபுரம், திருச்செங்கோடு, ஈரோடு மாநிலச் சாலைகளில் கி.மீ.36/8–ல் காக்காவேரியில் ஆரம்பித்து, அப்பநாயக்கன்பாளையம், ஏ.கே. சமுத்திரம், குருசாமிபாளையம் வழியாக அதே சாலையில், கி.மீ.51/2–ல் பொன்குறிச்சியில் முடிவடைகிறது. நாமகிரிப்பேட்டை மற்றும் சீராப்பள்ளி ஆகிய பேரூராட்சிப் பகுதிகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும்பொருட்டு, மல்லியக்கரை, இராசிபுரம், திருச்செங்கோடு, ஈரோடு சாலையில், கி.மீ.36/8–ல், காக்காவேரி கிராமத்தில் இராசிபுரம் புறவழிச் சாலை நேர்பாட்டினை ஆரம்பிப்பதற்குப் பதிலாக, அதே சாலையில் கி.மீ.30/4–ல் தண்ணீர்பந்தல் காட்டிலிருந்து ஆரம்பித்து மோகனூர், நாமக்கல், சேந்தமங்கலம், இராசிபுரம் சாலையில் கி.மீ. 52/4–ல் அப்பநாயக்கன்பாளையத்தில் இணைவதற்கு தற்போது ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

திருமதி ஆர். சாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னபடி, தண்ணீர்பந்தல்காட்டிலிருந்து பொன்குறிச்சி வரையிலும் புறவழிச் சாலை அமைக்க வேண்டும் என்பதுதான் அனைவருடைய கோரிக்கையும். ஆனால், 2001–2006–லே, இன்றைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையிலான ஆட்சியிலே, தண்ணீர்பந்தல்காட்டிலிருந்து பொன்குறிச்சி வழியாக புறவழிச்சாலை அமைக்க ஒரு திட்டம் தீட்டப்பட்டது. இதை கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே மாற்றியமைத்து காக்காவேரியிலிருந்து போடப்பட்டது. இந்தத் திட்டத்திற்காகத்தான் இன்றைய தொழில் துறை அமைச்சர் அவர்களும், முன்னாள் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். 2001–2006–ல் போடப்பட்ட திட்டத்தில் என்ன குறையைக் கண்டீர்கள்? கடந்த ஆட்சியில் ஏன் இந்தத் திட்டத்தை மாற்றியமைத்தார்கள்? 4 கி.மீ. அளவிற்கு இந்தச் சாலை சுற்றி வருகிறது. இப்பொழுது டீசல் விலையும், பெட்ரோல் விலையும் எவ்வளவு ஏறிப்போயிருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். அப்படி இருக்கும் சூழ்நிலையில், ஏன் 4 கி.மீ. சுற்றி வளைக்க வேண்டும்? தாங்கள் இதற்குமுன் தீட்டிய அந்தத் திட்டத்தைத்தான் பொதுமக்கள் விரும்புகிறார்கள். அனைவருடைய கோரிக்கையும் இதுதான். தாங்கள் 2001–2006–ல் தீட்டிய அந்தத் திட்டத்தையே செயல்படுத்துமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமகிரிப்பேட்டை மற்றும் சீராப்பள்ளி ஆகிய பேரூராட்சிப் பகுதிகளில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டுதான், அந்த புறவழிச் சாலை அமைக்கப்படுகிறது. இராசிபுரம் புறவழிச் சாலை முதற்கட்டப் பகுதி–1 பணி, கி.மீ.2/8 முதல் 8/8 வரை அப்பநாயக்கன்பாளையம் என்ற கிராமத்தில் ஆரம்பித்து சந்திரசேகரபுரம், அண்ணாபாளையம் வழியாக சேலம்–நாமக்கல் தேசிய நெடுஞ்சாலை எண் 7–ல் கி.மீ.230/4–ல் சென்றடைகிறது.

2013 மார்ச் 25]

இதற்காக 18.802 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு தற்போது சாலை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. முதற்கட்டப் பகுதி 2002–க்கான புறவழிச் சாலைப் பணி, கி.மீ.8/8 முதல் 13/675 வரை அமைப்பதற்கு சேலம்–நாமக்கல் தேசிய நெடுஞ்சாலை எண் 7–ல் கி.மீ.230/4–ல் ஆரம்பித்து, குறுக்காபுரம், கல்யாணி 85, ஆர். குமராபாளையம், ஆயப்பாளையம், பிள்ளாநல்லூர் மற்றும் பொன்குறிச்சி கிராமங்கள் வழியாக மல்லியக்கரை, இராசிபுரம், திருச்செங்கோடு, ஈரோடு மாநிலச்சாலை எண் 79–ல் கி.மீ.51/2–ல் சென்றடையும் வகையில், மொத்தம் 13.234 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

54—

நியாய விலைக் கடை

***10988—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, கத்தேரி கிராமம், வளையக்காரனூரிலுள்ள பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, கத்தேரி கிராமம், வளையக்காரனூர் பகுதிநேர நியாய விலைக் கடையை முழு நேரக் கடையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.